
பாரதிதாசன் ஆய்வுகள்



ஆசிரியர்

அறிஞர் வித்துவான் கே. வே. சந்தானம்
பி.ஏ. பி.லிட். பி.எல்.ஐ.எஸ்.,

பாரதிதாசன்
ஆய்வடங்கல்
BIBLIOGRAPHY OF BARATHIDASAN



ஆசிரியர்

வித்துவான்.

தே. வே. சந்தானம்

பி எ. பி லிட். பி.எல் ஐ எஸ்;

தலைவர், அரூர் வட்ட இலக்கிய மன்றம்,

அரூர். தருமபுரி மாவட்டம்.

தந்தை பெரியார் பதிப்பகம்,

82, தந்தை பெரியார் நகர்,

அரூர் 636 903. தருமபுரி மாவட்டம்.

நூல் : பாரதிதாசன் ஆய்வடங்கல்

மொழி : தமிழ்

ஆசிரியர் : வித்துவான். தே வே சந்தானம்

உரிமை : தந்தை பெரியார் பதிப்பகம்

பதிப்பு : முதற்பதிப்பு

நாள் : டிசம்பர் 1983

அச்சிட்டதாள் : 10.9 டபுள் கிரவுன் சேசசாயி

நூல் அளவு : 1 × 8 கிரவுன்

பொருள் : ஆய்வடங்கள்

எழுத்து : 10 புள்ளி

பக்கம் : 38

படிகள் : 1000

விலை : ரூ. 3-00

வெளியீடு : தந்தை பெரியார் பதிப்பகம், அரூர்.

அச்சு : குறிஞ்சி அச்சகம் அரூர்.

விலை ரூ. 3-00

வாழ்த்துரை

பாவலர். மணிவேலன், எம்.ஏ; அரூர்.

1. தமிழ்வெறியன் நான் என்பான்; தமிழைப்பற்றித்
தாழ்வாக எவரேனும் உரைத்து விட்டால்
உமிழ்வதற்கும் தயங்காத உரமு டையான்;
உயர்தமிழில் பெரும்புலமை கொண்டோர் தம்பால்
இமிழ்கடல்போல் பேரன்பு செலுத்து கின்ற
இயல்புடையான்; நாடோறும் தமிழை யோதும்
நிமிர்புலமை மிக்குடையான்; பாவேந் தர்பால்
நீங்காத பற்றுடையான்; தமிழ்க்குத் தொண்டன்

2. சொல்லாத பொருளில்லை; தமிழர் வாழ்வைத்
தூக்கிநிலை நிறுத்துதற்கு வாழ்நா ளெல்லாம்
அல்லல்வந்தே அலைத்தாலும் அடங்கி டாத
ஆற்றல்மிகு பாவேந்தர் நூற்க ருத்தைப்
பல்வகையில் ஆய்வதற்கே ஏற்ற தாகப்
'பாவேந்தர் ஆய்வடங்கல்' என்னும் நூலை
நல்வகையில் சந்தானம் ஆக்கி யுள்ளான்
நல்லோர்கள் பாராட்டைப் பெறுக நாளும்!

''குறிஞ்சி'' அரூர்
1-12-83

அன்புள்ள,
மணிவேலன்.

என்னுரை

வணக்கத்திற்குரிய தந்தை பெரியாரின் வழிநின்று இறுதிவரை தமிழ்ச்சமுதாயத்திற்குத் தொண்டு செய்தவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அன்னாரைப்பற்றி வாழ்க்கைக்குறிப்பேடு ஒன்றை தயாரிக்கும் பணியினை மேற்கொண்டேன். அது ஓர் ஆய்வடங்கலாக மாறியது

புரட்சிக்கவிஞரைப்பற்றி சில அறிஞர்கள் ஆய்வு செய்து பண்டாரகர் (டாக்டர்) பட்டம் பெற்றுள்ளனர், சிலர் ஆய்வு செய்து வருகிறார்கள் அவர்கட்கெல்லாம் துணை செய்யும் வகையில் Bibliography of Barathidasan' என்னும் நூலாக மலரச் செய்துள்ளேன்.

BIBLIOGRAPHY

As an art Bibliography consists of the techniques for ascertaining and presenting information about books.

As the typical product of the art Bibliography is a systematic listing for a particular purpose of books that share common characteristics.

PERSONAL BIBLIOGRAPHY

Personal bibliography is a list of writings. by and on a person in the field of literature personal bibli ographies are extremely important they may serve a very useful Purpose for scholars in the field of research.

உலகிலேயே அதிகமான ஆய்வுகள் செய்யப்பட்ட நூல் சேக்சுபியரின் நாடகங்கள் தாம். (A Shakespeare Bibliorap hy 1931) மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலக வியல் பேராசிரியரும் எனது ஆசிரியருமான திரு. திருமலைமுத்துசாமி அவர்கள் முதன் முதல் திருக்குறள் ஆய்வடங்கல் வெளியிட்டார்.

மேலை நாடுகளில் ஆய்வுத்துறை மிக மிக வேகமாக வளர்வதற்குக் காரணம் நல்ல பெரிய நூலகங்கள் மற்றும் ஆய்வு நூலகங்கள் உள்ளன என்பதுதான் ஆய்வாளருக்கு British Nationl Bibliography Indian National Bibliography, Books in Print, Accession Lists, Abstracts and Indexes. தமிழில் நூற்றொகை பல்கலைக்கழகங்களில் ஆய்வு செய்து பட்டம் பெற்றவர்களின் நூற்றொகை போன்ற நூல்கள் பெரிதும் துணைசெய்கின்றன அந்த அடிப்படையில்

நான் தயாரித்துள்ள பாரதிதாசன் ஆய்வடங்கல் புரட்சிக்கவிஞர் பற்றி பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்பவர் நூலின் தலைப்பு, பொருள், ஆகியவை ஒரே மாதிரி இருக்கும் குழப்பத்தை தவிர்க்க உதவும் என்று எண்ணுகிறேன்.

இந்த ஆய்வடங்கல் உருவாக ஒல்லும் வகையெல்லாம் உதவிய நண்பர் கவிஞர். கண்ணிமை அவர்கட்கும் மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரி பேராசிரியர் மு. இளமாறன் எம் ஏ. அவர்கட்கும் நன்றி. இந்நூல் வெளிவர எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அரூர் பாவலர் மணிவேலன் எம். ஏ அவர்கட்கும் அட்டைப்படம் சிறந்த முறையில் வரைந்த ஓவியர் கே. லிங்கன் அவர்கட்கும் நன்றி. சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த குறிஞ்சி அச்சகத் தோழர்கள். இர. சீத்தாராமன், பெ. சுப்பிரமணி, மா. மணி ஆகியோருக்கு நன்றி. புரட்சிக்கவிஞரின் வாழ்க்கை ஏட்டைப்புரட்ட உங்களை இருகரம் கூப்பி அழைக்கின்றேன்.

அரூர்
1—12—83

அன்பன்,
வித்துவான். தே. வே. சந்தானம்

எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்.

- பாரதிதாசன்

பிறந்த நாள் : 29-4-1891

பிறந்த இடம் : புதுச்சேரி

தந்தை : கனகசபை

தாய் : இலக்குமிஅம்மை

கல்வி :

தொடக்கக் கல்வியைப் பயின்றபின் தனது 16-ஆம் அகவையில் கல்வே கல்லூரியில் தமிழ்ப்புலவர் தேர்வில் முதன்மையாகத் தேறினார்.

தொழில் :

18-ஆம் அகவையில் அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

மனைவி : பழனியம்மாள்

மக்கள் : 1. செல்வன் மன்னர்மன்னன்
செல்வம் (பேரன்)

2. செல்வியர் சரசுவதி, 2 வசந்தா-
தண்டபாணி

3. ரமணி (மறைவு)

பாரதிதாசன் :

ஒரு திருமண வீட்டில் பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. தோழர்கள் முன்னிலையில் பாரதியார் 'பாடு' என்றதும் 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று தொடங்கி இரண்டு பாக்களைப் பாடினார். சுப்ரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தில் சேர்ந்த சுப்புரத்தினம் எழுதியது என்று பாரதி தன் கைப்பட அப்பாக்களை எழுதிச் சுதேசமித்ரன் இதழுக்கு அனுப்பினார். பத்து ஆண்டுகள் பாரதியும் பாரதிதாசனும் நெருங்கிப் பழகினர் அன்பினால் பாவேந்தர் தன்னைப் பாரதிதாசன் என்று அழைத்துக் கொண்டார்.

பாவேந்தர் முதல் தொகுப்பு :

பாரதிதாசன கவிதைகள்

தந்தை பெரியின் பகுத்தறிவுப் பாசறையின் தானைத் தலைவர் 'குத்தூசி' குருசாமியும் அவர் மனைவி குஞ்சிதம் குருசாமியும் 1938-ஆம் ஆண்டு வெளியிட்டனர். அடுத்து 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகம் வெளியிடப்பட்டது

அவர் படைப்புகள்

1. அகத்தியன் விட்ட புதுக்கரடி
   - பாரதிதாசன் பதிப்பகம், 1948.

2. அமைதி
   - செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம்

3. அழகின் சிரிப்பு
   - செந்தமிழ் நிலையம்

4 இசையமுது (முதல் பாகம்)
   - பராசக்தி நிலையம், 1944.

5. இசையமுது (இரண்டாம் பாகம்)
   - பராசக்தி நிலையம், 1952.

6 இரணியன் அல்லது இணையற்ற வீரன் (நாடகம்)
   - குடியரசுப் பதிப்பகம், 1939.

7 இருண்ட வீடு
   - முத்தமிழ் நிலையம், 1944.

8. இளைஞர் இலக்கியம்
   - பாரி நிலையம், 1967.

9 இன்பக்கடல். சத்திமுத்தப் புலவர்

10 உரிமைக் கொண்டாட்டமா?
   - குயில், 1948

11 எதிர்பாராத முத்தம்
   - வானம்பாடி நூற்பதிப்புக் கழகம், 1941.

12 எது பழிப்பு?
   - குயில், 1948.

13. எது இசை ?

- முத்தமிழ் நிலையம், 1949.

14. ஏழைகள் சிரிக்கிறார்கள்

15 ஏற்றப் பாட்டு

16 தமிழச்சியின் கத்தி

- பாரதிதாசன் பதிப்பகம், 1949.

17. தமிழியக்கம்

- செந்தமிழ் நிலையம்

18 தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு

19 தமிழின்பம்

20 தாயின் மேல் ஆணை

21. திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம்

22. தேனருவி இசைப் பாடல்கள்

- பாரதிதாசன் பதிப்பகம், 1956.

23 நல்லதீர்ப்பு (நாடகம்)

- முல்லைப் பதிப்பகம், 1944

24 கேட்டலும் கிளத்தலும்

25 கதர் இராட்டினப் பாட்டு

- புதுச்சேரி வேல் நிலையம், 1930.

26 கோயில் இருகோணங்கள்

27 பாட்டுக்கு இலக்கணம்

28. பாரதியின் ஆத்திச் சூடி
- பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, 1949.

29 பாண்டியன் பரிசு
- முல்லைப் பதிப்பகம், 1943.

30. பாரதிதாசன் கதைகள்
- முரசொலிப் பதிப்பகம், 1957.

31. பாரதிதாசன் கவிதைகள்
- கடலூர் டி. எஸ். குஞ்சிதம், 1938.

32. பாரதிதாசன் கவிதைகள் (முதற் பாகம்)

33 பாரதிதாசன் கவிதைகள் (இரண்டாம் பாகம்)
- பாரதிதாசன் பதிப்பகம், 1952.

34 பாரதிதாசன் கவிதைகள் (மூன்றாம் தொகுதி)

35 பாரதிதாசன் கவிதைகள் (நான்காம் தொகுதி)

36 பாரதிதாசன் நாடகங்கள்
- பாரி நிலையம், 1959.

37. கண்ணகி புரட்சிக் காப்பியம்
- அன்பு நூலகம், 1962.

38. கதர் இராட்டினப் பாட்டு
- காசி, ஈ. இலட்சுமண பிரசாத்

39. கற்கண்டு

40. கழைக் கூத்தியின் காதல்

41. காதல் நினைவுகள்
- செந்தமிழ் நிலையம், 1969

42. காதல் பாடல்கள்
- பூம்புகார் பிரசுரம், 1977.

43 காதலா, கடமையா?
- பாரதிதாசன் பதிப்பகம், 1948.

44. குடும்ப விளக்கு (ஒரு நாள் நிகழ்ச்சி)
- பராசக்தி நிலையம் 1942

45. குடும்ப விளக்கு (திருமணம்)
- பாரதிதாசன் பதிப்பகம், 1948

46 குடும்ப விளக்கு (மக்கட்பேறு)
- பாரதிதாசன் பதிப்பகம், 1950.

47. குடும்ப விளக்கு (விருந்தோம்பல்)
- முல்லைப் பதிப்பகம், 1944.

48. குடும்ப விளக்கு (முதியோர் காதல்)
- பாரதிதாசன் பதிப்பகம், 1950.

49. குயில் பாடல்கள்
- பூம்புகார் பிரசுரம், 1977.

50. குறிஞ்சித் திட்டு
- பாரி நிலையம், 1950.

51. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
- பாரதிதாசன் பதிப்பகம், 1949.

52 சிரிக்கும் சிந்தனைகள்

53. சௌமியன்

54. சேர தாண்டவம் (நாடகம்)
- பாரதிதாசன் பதிப்பகம், 1954.

55 பாரதிதாசன் பன்மணித் திரள்
- முத்தமிழ்ச் செல்வி அச்சகம், 1964.

56. பாரதிதாசன் பேசுகிறார்

57. பிசிராந்தையார்
- பாரி நிலையம், 1967.

58 புரட்சிக் கவி

- துரைராசு வெளியீடு, 1937.

59. பெண்கள் விடுதலை

- குயில், 1948

60. பொங்கல் வாழ்த்துக் குவியல்

- பாரதிதாசன் பதிப்பகம், 1954.

61. மணிமேகலை வெண்பா

- அன்பு நூலகம், 1962

62. மயிலம் ஸ்ரீ சுப்ரமணியர் துதியமுது

- காசி, ஈ இலட்சுமணபிரசாத், 1926

63. முல்லைக் காடு

- கலை மன்றம், 1955.

64. வந்தவர் மொழியா, செந்தமிழ்ச் செல்வமா?

65. விடுதலை வேட்கை, உயிரின் இயற்கை

- மன்றம வெளியீடு, 1948.

66. வீட்டுக் கோழியும், காட்டுக் கோழியும்

- குயில், புதுவை, 1959

29 – 4 – 1978 அன்று பூம்புகார் பிரசுரத்தினர் வெளியிட்ட புதிய நூல்கள்

1. தமிழுக்கு அமுதென்று பேர்
2. வேங்கையே எழுக!
3. ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது
4 புகழ் மலர்கள்
5. நாள் மலர்கள்
6 தேனருவி
7 தலைமலை கண்ட தேவர் (நாடகங்கள்)
8. குயில் பாடல்கள்
9. காதல் பாடல்கள்

திரைப்படங்களில் பாவேந்தர்

திரைப் பாடல்கள்

1. பொன்முடி
   'வெண்ணிலாவும் வானும் போல'

2. ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி
   – முழு உரையாடல்

3 ஓர் இரவு
   'துன்பம் நேர்கையில் யாழெடுத்து'

4. பராசக்தி

'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு'

5. ரங்கோன் ராதா

'தலை வாரிப் பூச்சூடி உன்னை'

6 இரத்தக் கண்ணீர்

'ஆலையின் சங்கே நீ ஊதாயோ'

7. திரும்பிப் பார்

'பாண்டியன் என் சொல்லை'

8. பஞ்சவர்ணக்கிளி

'தமிழுக்கு அமுதென்று பேர்'

9. கலங்கரை விளக்கம்

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்'

10. கல்யாணி

'அதோ பாரடி'

11 சந்திரோதயம்

'புதியதோர் உலகு செய்வோம்'

12 மணிமகுடம்

'கொலை வாளினை எடடா'

13 நம்மவீட்டுத் தெய்வம்

'எங்கெங்கு காணினும் சக்தியடா'

14. நான் ஏன் பிறந்தேன்?

'சித்திரச் சோலைகளே'

15. நானே ராஜா

'ஆடற் கலைக் கழகு தேடப் பிறந்தவள்'

16 அந்தமான் காதலி (நாடகம்)

'அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்'

'சோலையில் ஒருநாள் என்னையே'

'துன்பம் நேர்கையில் யாழெடுத்து'

சுபத்ரா, சுலோசனா ஆகிய படங்களுக்கு பாரதிதாசனே கதை, உரையாடல் எழுதினார். ஆனால் இவை சேலம் மாவட்டம் ஜலகண்டபுரம் ப கண்ணன் பெயர் போட்டு வெளியிடப்பட்டன. பாரதிதாசன் புராணப்-படங்களுக்கு எழுத விரும்பாமையால்

கதை, உரையாடல் பாடல்கள்

இராமாநுஜர்

பாரதிதாசன் முதன் முதலாக உரையாடலும் பாடல்களும் அமைத்த தமிழ்த் திரைப்படம் இராமாநுஜர். இராமாநுஜரின் குமுகாயக் கருத்தில் பாவேந்தருக்கு ஈடுபாடு உண்டு. படம் வெளிவரவில்லை.

பாலாமணி அல்லது பக்காத்திருடன் (1937)

திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதினார், திரு தி. க சண்முகம் உடன்பிறப்பினர் நடித்தார்கள்.

கவிகாளமேகம் (1939)

திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். நாதசுரச் சக்ரவர்த்தி திரு டி. என். இராசரத்தினம் கதைத் தலைவனாக நடித்தார்.

சுலோசனா (1944)

திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். புகழ்பெற்ற திரைப்படப் பிடிப்பாளரும் இயக்குநருமான டி. ஆர். சுந்தரம் கதைத் தலைவனாக நடித்தார்.

ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி (1947)

திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். திரு பு சு. கோவிந்தன் கதைத் தலைவனாக நடித்தார்.

பொன்முடி (1949)

'எதிர்பாராத முத்தம்' என்னும் காவியம் பொன்முடி என்னும் பெயரில் தயாரித்து வெளியிடப்பட்டது. திரு. பி .வி. நரசிம்மபாரதி கதைத் தலைவனாக நடித்தார். உரையாடல் கலைஞர் மு. கருணாநிதி.

வளையாபதி (1952)

திரைக்கதை, உரையாடல், பாடல் எழுதினார். ஜி. முத்துகிருட்டிணன் கதைத் தலைவனாக நடித்தார். இதன் பின்னர் அவர் வளையாபதி முத்துகிருட்டிணன் என்று அழைக்கப்பட்டார்.

பாவேந்தரைப் பற்றிய நூல்கள்

1. *புரட்சிக் கவிஞர்*

அண்ணாதுரை, சி. என், நெடுஞ்செழியன், இரா, அன்பழகன், க. அமெரிக்காவில் ஒரு பாரதிதாசன் - திருச்சி நாவலர் பதிப்பகம் (முதற்பதிப்பு) 1951.

அண்ணாதுரை. சி. என் , 'ஏ, தாழ்ந்த தமிழகமே! சென்னை முத்தமிழ் நிலையம் (பன்னிரண்டாம் பதிப்பு) 1975.

2. அறிவொளி, அ.

‘ பாரதிதாசனில் புதிய பார்வை ’
முத்துப்பேட்டை சோழன் பதிப்பகம் (முதற்பதிப்பு)1975

3 அப்துல் கரீம், மு

‘ பாரதிதாசன் பாட்டுத் திறம் ’

4 இராசவேல், நா.

‘ பாரதிதாசன் பண்புகள் ’
சென்னை சூழ்நிலை வெளியீடு (முதற்பதிப்பு) 1951.

5. இராமநாதன், ந

‘ கவிஞரும் காதலும் ’
சென்னை முத்தமிழ் நூலகம் (முதற்பதிப்பு) 1960.

6. இராமலிங்கன், அரங்க.

‘ பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை ’
சென்னை கற்புக்கரசி பதிப்பகம் (முதற்பதிப்பு) 1978.

7. இளங்கோ, டாக்டர் சு.

‘ பாரதிதாசன் இலக்கியம் ’ சென்னை தமிழ்மணி
புத்தக நிலையம் (முதற்பதிப்பு) 1978.

8. இளங்கோ, டாக்டர் சு,

'குடியரசு இதழில் பாரதிதாசன் பாடல்கள்'
ஏரக வெளியீடு மதுரை - 20. 1983.

9. இளங்கோ, டாக்டர் சு,

'பாரதிதாசன் ஒரு நோக்கு'
சிந்தனையாளர் பதிப்பகம் சென்னை-28. 1983.

10. இளங்கோ, டாக்டர் சு.

'பாரதிதாசன் கதைப் பாடல்கள்'
சென்னை தமிழ்மணி புத்தக நிலையம் (முதற்பதிப்பு)
1978.

11. இளந்திரையன், சாலை.

'புரட்சிகவிஞர் கவிதை வளம்'
சென்னை பாரி நிலையம், (முதற்பதிப்பு)

12. இளந்திரையன், சாலை.

'புதிய தளத்தில் புரட்சிக் கவிஞர்'

13 இளந்திரையன், சாலை.

'புரட்சி முழக்கம்' சென்னை பூம்புகார் பிரசுரம், 1978.

14. எழிலரசன். கூ. வெ

'பாரதிதாசன் நாடகத்திறன்' 1983.

15. கண்ணன், கோ.

'பாவேந்தின் குடும்ப விளக்கு ஒரு திறனாய்வு' வேலூர் வேணி நூலகம் (முதற்பதிப்பு) 1977

16 கண்ணன், கோ.

'புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்வும் இலக்கியமும்' சென்னை மாப்பிள்ளை பதிப்பகம் (முதற்பதிப்பு)

17 கலைச்செல்வன்

'புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வாழ்வும் இலக்கியமும்' சென்னை மாப்பிள்ளை பதிப்பகம் (முதற்பதிப்பு) 1976.

18 செகத்ரட்சகன், டாக்டர்.

'பாரதியும் பாரதிதாசனும்'

19. கண்மணிமை, பாவலர்

'முக்கனிச் சாறு' (பாவேந்தர் பற்றிய பாத்தொகுப்பு) குயில் பதிப்பகம், திண்டிவனம் 1968.

20. குருவிக்கரம்பை சண்முகம், டாக்டர்

'பாரதிதாசனுக்குப் பின் தமிழ்க் கவிதை உலகம்'

21. கோவிந்தசாமி, டாக்டர் மு.

‘ பாரதிதாசன் கவித்திறன் ’
சென்னை பாரி நிலையம் (இரண்டாம் பதிப்பு) 1969.

22. கோவேந்தன், த.

‘ பாவேந்தர் பாரதிதாசன் ’
வேலூர் பாவலர் பதிப்பகம் (முதற்பதிப்பு) 1965.

23. கோவேந்தன், த

‘ இருண்ட வீட்டின் குடும்ப விளக்கு ’
மதுரை இரவி பதிப்பகம் (முதற்பதிப்பு) 1953

24. சண்முகம், மா.

‘ என் பார்வையில் பாவேந்தர் ’
சென்னை காவிரி வெளியீடு (முதற்பதிப்பு) 1977.

25. சந்தானம், வித்துவான் தே வே.

‘ பாரதிதாசன் பாத்திறன் ’ சென்னை திருவிளக்கு இதழில் தொடர்ந்து வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு (48 கட்டுரைகள், அச்சில் வெளிவராதது) 1974,1975.

26 செல்லப்பன், சு. சிலம்பொலி

பாரதிதாசன் ஓர் உலகக்கவிஞன்
அருணோதயம் பதிப்பகம், சென்னை. 1983.

27 சுப்பிரமணியன், இராம.

'புரட்சிக் கவி உள்ளம்'
கோயம்புத்தூர் மெர்க்குரி புத்தகக் கம்பெனி
(முதற்பதிப்பு) 1975.

28. சுப்பிரமணியன், வ.

'வாழ்வியற் கவிஞர்கள்'
சென்னை புது இலக்கியப் பதிப்பகம் (முதற்பதிப்பு)

29. செல்வராசன், டாக்டர் மரா

'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்'
சென்னை வண்ணமலர் பதிப்பகம் (முதற்பதிப்பு) 1978.
'பாரதிதாசன் கனல்கள்'
பாரி நிலையம், சென்னை 1980.

30 சொக்கலிங்கம். ந

'பாரதிதாசன் பாடல்களில் மரபும் புதுமையும்'
திருநெல்வேலி தனித்தமிழ் இலக்கியக் கழகம்
(முதற்பதிப்பு) 1968.

31. ஞானசம்பந்தன், அ. ச.

'இன்றைய இலக்கியம்'
கோயம்புத்தூர் மெர்க்குரி புத்தகக் கம்பெனி
(முதற்பதிப்பு) 1971.

32. தமிழ் மல்லன்

'பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு'
168-மாரியம்மன் கோயில் வீதி, புதுச்சேரி
(முதற்பதிப்பு) 1977.

33 **நசீம்தீன், டாக்டர் பி**

' பாரதிதாசன் பாடல்களில் இயற்கை '
மதுரை மீனாட்சி புத்தக நிலையம்
(முதற்பதிப்பு) 1973.

34. **பசுபதி, ம. வே.**

' பாவேந்தரின் பாநயம் '
தஞ்சாவூர்இலட்சுமிபுத்தகநிலையம் (முதற்பதிப்பு)1971

35. **புத்தனேரி சுப்பிரமணியம்.**

' பாவேந்தர் நெஞ்சில் குழந்தைகள் ' - ஒருதிறனாய்வு
வானதி பதிப்பகம், சென்னை. 1979,

36 **புலமைதாசன் (தொகுப்பாசிரியர்)**

' பாவலர் போற்றும் பாவேந்தர் '
2A, பார்த்தசாரதி தெரு, சென்னை 1978.

37. **புலமைப்பித்தன்**

' பாவேந்தர் பிள்ளைத் தமிழ் '
சென்னை அண்ணா பதிப்பகம்
(இரண்டாம் பதிப்பு) 1978.

38 **மணி, டி. சி. சு**

' கவிஞரின் கதை '
திருச்சி புத்தொளி பதிப்பகம் (முதற்பதிப்பு) 1947.

39. **மயிலைநாதன்**
' புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு '
ஒரு திறனாய்வு, பொறி பதிப்பகம், சென்னை. 1979.

40. மாணிக்கம், மு. (புதுவைக் கிழார்)

' பாவேந்தர் பாரதிதாசன் '
' பாரதிதாசன் சரித்திர வெண்பா '
புதுச்சேரி அன்பு வெளியீடு (முதற்பதிப்பு) 1964.

41. மாணிக்கம், துரை. (பெருஞ்சித்திரனார்)

' புரட்சிப் பாவலர் பாரதிதாசன் '
கடலூர் தென்மொழி (முதற்பதிப்பு) 1969.

42. முத்தையா, முல்லை.

' புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் '
சென்னை மலர் நிலையம் (மூன்றாம் பதிப்பு) 1953.
' பாவேந்தர் பாரதிதாசன் அறுசுவை விருந்து '
மணிவாசகர் நூலகம், சிதம்பரம் 1980.

43. முத்தையா, முல்லை

' புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையிலே '
சென்னை முத்தமிழ் நிலையம் (முதற்பதிப்பு)

44 முத்துலக்கையன், நா.

' பாரதியும் பாரதிதாசனும் '
திண்டுக்கல் தாய்மொழிப் பதிப்பகம்
(முதற்பதிப்பு) 1966

45 முதுகண்ணன்

' பாவேந்தர் நினைவாற்றல் '
புதுச்சேரி கண்ணம்மை அச்சகம் (முதற்பதிப்பு) 1964.

46 வல்லிக்கண்ணன்

'பாரதிதாசன் பாடலில் உவமை'
சென்னை முல்லை முத்தையா வெளியீடு

47. வலம்புரி சான், க. மு. ச. இ.

'புதுவை தந்த போதை'

48. வீராசாமி, டாக்டர் தா. வே.

'பட்டறையிலே பாரதிதாசன்'
கோயம்புத்தூர் மெர்க்குரி புத்தகக் கம்பெனி
(முதற்பதிப்பு) 1971.

49 வீராசாமி, டாக்டர் தா. வே

'தமிழ் நாடக நூல்களில் பாரதிதாசன்'
சென்னை தமிழ் புத்தகாலயம் (முதற்பதிப்பு)

50. சுந்தரம், முருகு.

'பாவேந்தர் நினைவுகள்'
சிவகங்கை அகரம் முதற்பதிப்பு, 1979.

51. சுந்தரம், முருகு.

'அரும்புகள், மொட்டுகள், மலர்கள்'
சிவகங்கை அகரம் பதிப்பகம் (முதற்பதிப்பு)

52 தேன்தமிழ்ப் பதிப்பகம்

' பாவேந்தர் வாக்கும் நோக்கும் ' (தொகுப்பு)
சேலம், முதற்பதிப்பு 1982.

53. Thangappan, M.L.

' Bharathi Dasan '
Pondicherry Mannar Mannan,
89. Perumal Koil St., (First Edition) 1973.

பாரதிதாசன் பற்றிய மலர்கள்

1. அணுக்கதிர் பாவேந்தர் நினைவு மலர், 1964.

2. கவிஞர் மலர் 28-7-1946.

3. ' சுடர் ' பாரதிதாசன் மலர், தில்லி தமிழ்ச் சங்கம், 1966.

4. பாரதிதாசன் 'குயில்' பாவேந்தர் சிறப்புத்தமிழ், 21-4-1968

5. ' பொன்னி ' பாரதிதாசன் மணி விழா மலர், ஏப்ரல் 1951

6. ' முரசொலி ' பாரதிதாசன் மலர் 22-4-1955.

7. ' வளர்தமிழ் ' மலர், தில்லி 1972.

8. ' ஹனுமான் ' ஆண்டு மலர், 1938.

9. ' குயில் ' - பாவேந்தர் மலர், 1968, 69, 70.

ஆய்வேடு

‘ அச்சிடப்படாத ஆய்வியல் ஏடுகள் ’

1. **கனகசபாபதி. சி.**

‘ பாரதியும் பாரதிதாசனும் ’ மதுரை காமராசர் பல்கலைகழக டாக்டர் பட்டத்திற்காக அளிக்கப்பெற்று ஏற்றுக் கொள்ள பட்ட ஆய்வேடு,

2. **ஆழ்வார்**

‘ மார்க்சீய சிந்தனையும் பாரதிதாசனும் ’
(Marxian Thought and Bharathi Dasan)
மதுரை காமராசர் பல்கலைக் கழக ஆங்கிலம் மற்றும் ஒப்பிலக்கியத் துறைக்கு ‘ M. Phil ’ பட்டத் தேர்விற்காக ஜூலை 1979-ல் அளிக்கப்பெற்று ஏற்றுக்கொள்ளப்பெற்ற ஆய்வேடு.

திரு. கி ஆழ்வார், எம் ஏ., பி. காம்., பி எல்., திருச்செந்தூரா ஆதித்தனார் கல்லூரியில் ஆங்கிலத் துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

திரு அரங்க இராமலிங்கம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை அவர்களால் M. Phil பட்டத்திற்கு ‘ பாரதிதாசன படைப்புக்களில் நகைச்சுவை ’ என்னும் ஆய்வேடு படைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது பாரி நிலையம், சென்னை வெளியீடாக 1978இல் வெளிவந்தது.

தமிழக அரசு செய்த சிறப்பு

தமிழக அரசு புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக உரு. 1000 பணப் பரிசும் சான்றிதழ்களும் பெற்றவர்கள்;

1. 'கவிஞரும் காதலும்.'
   - புலவர் ந. இராமநாதன்

2. ,புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு'
   - மயிலைநாதன்

3. 'புரட்சி முழக்கம்'
   - சாலை இளந்திரையன்

4. 'பாரதிதாசன் கதைப் பாட்டு'
   'பாரதிதாசன இலக்கியங்கள்'
   - டாக்டர் சு. இளங்கோ.

விருது பெற்ற பாவலர்கள்

பாரதிதாசன் நினைவு விருது - தமிழக அரசு அளித்தது

தமிழக அரசு புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக பாரதிதாசன் விருது பெற்ற பாவலர்கள் ரூ. 10,000 பணப் பரிசு பெற்றவர்கள்;

1978-இல் உவமைப் புலவர் சுரதா

1979-இல் பாவலர் வாணிதாசன், எஸ். டி. சுந்தரம்

1980-இல் கவிஞர் முத்துலிங்கம்

1981-இல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

1982-இல் பாவலர் புத்தனேரி சுப்பிரமணியம்

1983-இல் திண்டிவனம் வகாப்

1983-ஆம் ஆண்டிலிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாள் விருதாக 65-வயது கடந்த சிறந்த புலவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப்படும் புலவருக்கு மாதம் ரூ. 500/- காணிக்கை நிதியாகத் தொடர்ந்து அரசு வழங்கும். அதைத்தவிர மற்றொரு சிறப்புப் பெற்ற கவிஞருக்கு பணமுடிப்பும் பரிசுத்தொகையாக ஆண்டுதோறும் ரூபாய் 10,000/- வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் ச. சிவப்பிரகாசம் (வயது 70) மாதம் ரூ. 500/- காணிக்கை நிதியாகத் தொடந்து பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் தங்கப்பதக்கமும் பெறுவார்.

பாவேந்தர் நூல்களை ஆய்ந்து 'டாக்டர்' பட்டம் பெற்றவர்கள்

1. டாக்டர் ச. சு இளங்கோ, மாநிலக் கல்லூரி, சென்னை.

   'பாரதிதாசன் கதைப்பாட்டு'

   'பாரதிதாசன் இலக்கியங்கள்'

2 டாக்டர் மா. செல்வராசன், தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

   'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்' 1979.

3. டாக்டர் கு. ப. கணேசன், தமிழ்ப்பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, தருமபுரி

   'பாரதிதாசன் பாடல்கள் - ஒரு திறனாய்வு' 1978

ஆய்வு செய்து கொண்டிருப்பவர்கள்

1. பேராசிரியர், மு. இளமாறன் எம் ஏ, (ஆங்கிலம்) எம். ஏ., (தமிழ்) பி டி., சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை.

   'பாரதிதாசனும் ராபர்ட் பேர்ன்ஸும்'

2. பேராசிரியர் பி. சந்திரகுமார், மாநிலக் கல்லூரி, சென்னை.

'பாரதி, பாரதிதாசன் வோர்ட்ஸ் ஒர்த் ஒப்பாய்வு'

3 டாக்டர் ச சு இளங்கோ.

'பாரதிதாஸனும் சினிமாவும் நாடகமும்

சிலை

தமிழக அரசு பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு நடத்தப்பட்டது. அச்சமயம் அரசினரால் சென்னைக்-கடற்கரையில் (1968) முழு உருவச் சிலை நிறுவிச் சிறப்புச் செய்யப்பட்டது

புதுவையில் பாரதிதாசன் சிலை, பாரதிதாசன் நினைவு நூலகம், பாரதிதாசன் நினைவு மண்டபம், பாரதிதாசன் காட்சிக்கூடம் ஆகியவை உள்ளன.

பணமுடிப்பு

தமிழ்நாட்டு மக்கள் சார்பில் அறிஞர் அண்ணா அவர்கள் 29-7-1946-இல் புரட்சிப் பாவேந்தருக்கு உருபாய் 25,000 (இருபத்து ஐயாயிரம்) திரட்டித் தந்து

சிறப்புச் செய்தார்கள். பரிசளிக்கும் போது அண்ணா தம் கையிலுள்ள பணமுடிப்பைப் பாவேந்தரையே எடுத்துக்-கொள்ளச் செய்ததன் வழியாக வாங்கும் கையை உயரச் செய்து வழங்கும் கையைத் தாழ்த்திக் கொண்டார்.

விழா நடந்த இடம் : பச்சையப்பன் திடல், சென்னை.

தலைமை : பசுமலை வழக்கறிஞர் சோமசுந்தர பாரதியார்

சொற்பெருக்காற்றியவர்கள்: அனைத்துக் கட்சியினர்

இயக்கம்

தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபட்டு இறுதிவரை திராவிட இயக்கப் பாவலராகவே இருந்தார்.

பாவேந்தர் தாங்கிய பதவிகள்

1955-இல் புதுவைப் பகுதி இந்திய அரசில் இணைந்த-பின் முதன் முதலாகச் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் முன்னணி கட்சி சார்பில் காசுக்கடைத் தொகுதியில் போட்டியிட்டு உறுப்பினர் ஆனார். சட்ட மன்றக் கூட்டத்தின் முதல் தலைவராக இருந்து சங்கப் பேரவைத் தலைவராகத் தேர்ந்து எடுக்கச் செய்தார்.

பாவேந்தர் கண்ட மன்றம்

1961-இல் 'உலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம் எனும் தனி அமைப்பைப் பாவலர்களுக்கென நிறுவினார்.

பாவேந்தரின் புனை பெயர்கள்

கண்டெழுதுவோன், கிண்டல்காரன், கிறுக்கன், கே. எஸ். ஆர், கே. எஸ்.- பாரதிதாசன்.

பாவேந்தரின் பணி

தமிழாசிரியர். 37 ஆண்டுகள் தம்து 18-ஆவது அகவை முதல் 55-ஆவது அகவை வரை பணியாற்றினார்.

பாவேந்தர் அறிந்த பிற மொழிகள்

1. பிரெஞ்சு, 2. ஆங்கிலம்.

பாவேந்தரின் பிற திறன்


சிலம்பம், குத்துவரிசை முதலான உடற்பயிற்சிகளில் தேர்ச்சி இசையோடு பாடுவதிலும் புலமை.

கவிஞரின் இதழுலகம்

தேசபக்தன், ஆத்மசக்தி, துய்ப்ளேக்சு, தாய்நாடு, புதுவை அரசு, கவிதாமண்டலம், முல்லை, குயில் ஆகிய இதழ்களின் ஆசிரியர்.

சாகித்ய அகாதமி பரிசு

1969-ஆம் ஆண்டு 'பிசிராந்தையார்' நாடகத்துக்கு 'சாகித்ய அகாதமி' பரிசு வழங்கப்பட்டது 29-3-1970 இல் பாவேந்தரின் மனைவியும் மகனும் சென்று உருபாய் ஐயாயிரமும் ஒரு செப்புப் பட்டயமும் பரிசாகப்பெற்றனர்.



ஆசிரியர் பற்றி

பெயர் : **தே. வே. சந்தானம்,**

முழுப்பெயர்: வித்துவான் தே. வே. சந்தானகோபால கிருட்டிணன்

பிறந்த தேதி: **1-7-1933**

தந்தை : தேசாய் வேணுகோபால்,
மத்திய திராவிடர் கழக கமிட்டி உறுப்பினர்
தந்தை பெரியார் நகர், அரூர்.

தாய் : செயலக்குமி

படிப்பு : வித்துவான். சென்னைப் பல்கலைக் கழகம் 1970

வித்துவான்	சென்னைப் பல்கலைக் கழகம்		1970
பி. லிட்.	,,	,,	1977
பி. எல். ஐ. எஸ்.	,,	,,	1981
பி. ஏ.	தில்லி பல்கலைக்கழகம்		1977

பணி : நூலக ஆய்வாளர், நூலகஆணைக்குழு தருமபுரி

பதவி : தலைவர், அரூர் வட்ட இலக்கிய மன்றம்
அரூர், (துவக்கம் 2—10—1960)
செயலாளர், பழைய மாணவர் சங்கம், அரூர்.

இலக்கியபணி : சொற்பொழிவு

கடந்த 35 ஆண்டுகளாக இலக்கிய சொற்பொழிவு நிகழ்த்துகிறர். 1972-ல் காரைக்குடி கம்பன் திருநாளில் பேசினார்.

எழுத்துத்துறை

ஆசிரியரின் இலக்கிய கட்டுரைகள் திறனாய்வுகள் பல்வேறு தலைப்புகளில் கடந்த முப்பது ஆண்டுகளில் ஏறத்தாழ 350 கட்டுரைகள் வெளிவந்தன ஆசிரியரின் கட்டுரைகள் வெளிவந்த இதழ்கள் பெயர் வருமாறு திருவிளக்கு. காஞ்சி, சங்கொலி, திருவிடம், அன்னம், குயில், தேனமுதம், குறளமுதம் (பெங்களூர்) சமூக ஊழியன் வேலூர் (சேலம்); எண்ணம் ஊராட்சி தூது, மன்றம் உண்மை.

தமிழக சட்டமன்ற தலைவர் மாண்புமிகு க. இராசாராம் பி.ஏ. அவர்களை நிறுவனராகவும் திரு. G நாகராசன் அவர்களை ஆசிரியராக கொண்டு சென்னையிலிருந்து வெளிவந்த 'திருவிளக்கு' வாரஇதழில் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

அரூர் வட்ட இலக்கிய மன்றச்சார்பில் இதுவரை 19 கவிதைப் போட்டிகள் தமிழக அளவில் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. மன்றசார்பில் 1965-ல் 'நெஞ்சில் வாழும் நேரு' கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது

நூலாசிரியரைப்பற்றி

முறையாய்ப் பயின்றவர் முத்தமிழ்ப்புலவர்
நிறையப் பயிலும் நெஞ்சம் கொண்டவர்
வரிச்செயுள் வரைபவர்; வம்பரை அறைபவர்
உரைநூல் போன்று உள்ளம் விரிந்தவர்
தமிழும் அந்தத் தமிழுக்குச் சொந்தத்
தமிழனும் உயர்ந்து தழைக்க விழைபவர்

— கவிஞர். **கண்மணி**